செய்தி வெளியீடு எண் : 592 நாள்:10.08.2021

அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகம்

உயர்நீதிமன்றம், சென்னை – 600 104.

தற்காலிக ஓட்டுநர் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

அறிவிப்பு எண்: 01/2021 நாள்: 09.08.2021

சென்னை, உயர்நீதிமன்ற வளாகம், சட்ட அலுவலர்கள் கட்டிடம், 3வது தளத்தில் அமைந்துள்ள அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகத்தில் தற்காலிக ஓட்டுநர் பணியிடம் ஒன்று காலியாக உள்ளது. இப்பணிக்கு 8–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 18 வயது முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். 01.07.2021–ல் வயது 18 பூர்த்தியாகி இருக்க வேண்டும். மேலும், இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும். 5 வருடத்திற்குக் குறையாத இலகுரக ஓட்டுநருக்கான அனுபவம் பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பிக்கும் பொழுது வேலைவாய்ப்பு அலுவலக பதிவு எண்ணைத் தவறாமல் குறிப்பிட வேண்டும். இப்பணிக்கான சம்பள விகிதம், ஊதிய நிலை-8, ரூ.19,500/- ஆகும். இதற்கான விண்ணப்பத்தினை "அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர், சட்ட அலுவலர்கள் கட்டிடம், 3வது தளம், உயர்நீதிமன்றம், சென்னை – 104" என்ற முகவரிக்கு 25.08.2021 மாலை 5.45 மணிக்குள் வந்து சேருமாறு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப உறையின் மேல் "ஓட்டுநர் பணிக்கு விண்ணப்பம்" என்று எழுதப்பட வேண்டும்.

சென்னை மாவட்டத்தை சேர்ந்த விண்ணப்பதாரர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விண்ணப்பிக்கும் பொழுது புகைப்படம் மற்றும் இதர சான்றிதழ் நகல்கள் அனைத்திலும் " Self attested signature " உடன் இணைக்கப்பட வேண்டும். விண்ணப்ப உறையினுள், முகவரியுடன் கூடிய ஒரு "Self envelop cover affixed with Rs. 25/- Postal Stamp" வைத்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

9/8/21

அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர்,
உயர்நீதிமன்றம் சென்னை – 600 104.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9